# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
## අති විශෙෂ
# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேஷமானது

අංක 243/59 — 1976 දෙසැම්බර් 17 වැනි සිකුරාදා — 1976.12.17

243/59 ம் இலக்கம் — 1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) — பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### பொது பாதுகாப்புச் சட்டம் (அதிகாரம் 40)

*அவசர (வியாபார ஒழுங்குவிதிகள்) ஒழுங்குவிதிகள்*

#### அறிவித்தல்

உத்தரவுபெற்ற அதிகாரியான டி. விஜயசிங்க ஆகிய நான், அவசர (வியாபார ஒழுங்குவிதிகள்) ஒழுங்குவிதிகளின் கீழ், இத்தால் குறிப்பிடுகிறேன் :—

(அ) 2 ஆம் ஒழுங்குவிதியின் கீழ், அவ்வொழுங்குவிதியின் பிரகாரம் வழங்கப்பட வேண்டிய உத்தரவுச் சீட்டின் நிபந்தனைகளும் விதிகளுமாகப் பின்வருவனவிருக்கும். அதாவது :—

(1) உத்தரவுச்சீட்டானது நிறுத்தப்படும்வரை அல்லது இரத்துச் செய்யப்படும்வரை அமுலிலிருத்தல் வேண்டும் ;

(2) வேறெந்தச் சட்டத்தின், உப சட்டத்தின், விதியின் அல்லது ஒழுங்குவிதியின் கீழ் தனக்கு வேண்டிய வேறெந்த உத்தரவுச்சீட்டையும் உத்தரவுச்சீட்டுக்காரர் பெறுவதற்கு உத்தரவுச் சீட்டு எதிர்பார்க்காது ;

(3) உத்தரவுச்சீட்டு இன்னொருவருக்கு மாற்றமுடியாது ;

(4) உத்தரவுச்சீட்டுக்காரரின் வியாபார இடங்களில் தெளிவான இடத்தில் உத்தரவுச்சீட்டு வெளிக்காட்டப்படும் ;

(5) அவசர (வியாபார ஒழுங்குவிதிகள்) ஒழுங்குவிதிகளின் தேவைகளுக்கு உத்தரவுச்சீட்டு இணங்குவதுடன் வர்த்தமானியில் உத்தரவு பெற்ற அதிகாரியால் குறிப்பிடப்படும் வேறெந்த நிபந்தனைகளுக்கும் இவற்றிற்கும் இணங்கும்.

(ஆ) உத்தரவுச்சீட்டை வழங்குவதற்கு அவ்வுத்தரவுச்சீட்டின் விண்ணப்பத் திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் தனது வியாபாரத்தை ஆரம்பித்த ஒருவருக்கு ஒழுங்குவிதி இல. 3 (i) யின் கீழ் ரூபா ஒன்று (ரூபா 1/–) ; (ii) மற்றைய எல்லோருக்கும் ரூபா ஐந்து (ரூபா 5/–) கொடுப்பனவுக் கட்டணமுமாகும்.

(இ) இத்துடனுள்ள அட்டவணையில் காணப்படும் பொருட்கள் 16 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் சமூகத்தின் வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும்.

டி. விஜயசிங்க,
அவசர (வியாபார ஒழுங்குவிதிகள்)
ஒழுங்குவிதிகளின் கீழ் உத்தரவு பெற்ற
அதிகாரி.

வியாபார அமைச்சு,
யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
17 டிசெம்பர் 1976.

#### அட்டவணை

தீப்பெட்டிகள்
எக்சசைஸ் புத்தகங்கள்
மொனிடஸ் எக்சசைஸ் புத்தகங்கள்
கணித உபகரணப் பெட்டிகள்
பென்சில்கள்
சிலேற்கள்
சிலேற் பென்சில்கள்
ஷேர்ட்கள்
பருத்தி ஆடைவகைகள்
சின்தெட்டிக் ஆடைவகைகள்
பைசிக்கிள்கள்
பைசிக்கிள் டயர்களும் டியூப்களும்
மோட்டார் வாகனங்கள், திருக்டர் மாற்றுறுப்புகளும்
மோட்டார் வாகனங்களும் திருக்டர் டயர்களும் டியூப்களும்
ஆயுள்வேத மருந்துகள் தவிர்ந்த மருந்துகள்
ரூத் பேஸ்ட்
டோர்ச் பட்டரிகள்
ட்ரான்சிஸ்டர் றேடியோக்களுக்கான பட்டரிகள்
முட் கம்பி
விவசாய உரம்
தையல் மெஷின்கள்

அட்டவணை—(தொடர்)

பைசிக்கள் மாற்றுறுப்புகள்
மண்ணெண்ணெய்
கட்டிடப் பொருட்கள்
திருக்டர்களும் திருக்டர் மாற்றுறுப்புகளும்
விவசாய உபகரணங்கள்
அக்ரே கெமிக்கல்கள்
மின்சார பல்புகள்
சவர்க்காரம்
சப்பாத்துகள்
சூட்கேஸ்களும் மற்றைய தோல் பொருட்களும்
பேனைகள்
மின்சாரப் பொருட்கள்
டல்கம் பவுடர்
அலுமினியம் பொருட்கள்
தகரப் பொருட்கள்
பிளாஸ்டிக் பொருட்கள்
ருத் பிரஷ்கள்
சுத்திகரிப்பதற்கான இரசாயனங்கள்
ஆடைகள் கழுவுவதற்கான நீலமும் மற்றைய இரசாயனங்களும்
எழுதும் மை
தையல் நூல்
அரிதட்டுகளும், வடிகளும்
அன்டிசெப்டிக்குகள்
சேவ்டி பின்கள்
மேசை விரிப்புகள்
வயரும் வயர் ஆணிகளும்
கத்திகள்
டம்ளர்களும் பீங்கான் பொருட்களும்
பிரஸ் கரண்டிகள்
குடைகள்
விளக்குகள்
மண்டில்கள்
பொலிஷ்கள்
அஸ்பெஸ்டஸ் ஷீட்கள்
ஊட்டும் போத்தல்கள்
சிமெந்து
ஷீட் கிளாஸ்
தயாரான கலந்த பெயின்ற்கள்
தேயிலைப்பெட்டியும் தேயிலைப்பெட்டி உறுப்புகளும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது